துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்:

# கோவை மாநகர் மாவட்டத்தில் மருத்துவ முகாம்கள் - நல உதவிகள்!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம் - மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிவிப்பு!

கோவை, நவ.23-

கோவை மாநகர் மாவட்ட செயற்குழு கூட்டம், நேற்று முன்தினம் (21-11-2024, வியாழக்கிழமை) காலை வடகோவை கிராஸ்கட் சாலையில் உள்ள கோவை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா. கார்த்திக் தலைமையில் நடைபெற்றது.



இக்கூட்டத்தில், கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. அது வருமாறு:-

இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம், திராவிட இயக்கத்தின் வழித்தோன்றல், திராவிட சூரியன், ஒற்றை செங்கல் புரட்சியின் வெற்றி நாயகன், மக்கள் நலனை என்றும் இதயத்தில் சுமந்திருப்பவர்,

நமது கழகம் தமிழ் கூறும் நல்லுலகம் உள்ள வரை தழைத்தோங்கி வளரும், உயரும், தமிழ்மக்களின் நலனுக்காக என்றும் உழைக்கும் எனும் நம்பிக்கை ஒளிக்கீற்றை கையில் ஏந்தி வரும் அயராத உழைப்பின் அடையாளம், மக்கள் நலனை என்றும் இதயத்தில் சுமந்திருக்கும், தி.மு.க கழகத்தின் தொண்டன், கழக இளைஞரணிச் செயலாளர், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என ஓங்கி உயர்ந்து கழகத்தின் காவல் அரணாக காட்சியளிக்கும் கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நவம்பர் 27 அன்று 47-வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி தலைமையில், கோவை மாநகர் மாவட்டத்திற்கு உட்பட்ட 16 பகுதி, 54 வட்ட கழகங்கள் மற்றும் அனைத்து பூத்களிலும் கழக இரு வண்ணக்கொடி ஏற்றி, அனைத்து பகுதிகளிலும் ஏழை, எளியவர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் மரக்கன்றுகளை நடுதல், மருத்துவ முகாம்கள், இரத்த தான முகாம்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியருக்கு கல்வி உதவி வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துவது என இக்கூட்டம் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ,கல்பனா செந்தில், பொருளாளர் எஸ்.எம்.பி.முருகன், கோவை மாநகராட்சி மேயர் இரங்கநாயகி இராமச்சந்திரன், தீர்மானக்குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து, சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் பிஆர்.அருள்மொழி, LPF சு.பார்த்தசாரதி, தீர்மானக்குழு உறுப்பினர் மு.இரா.செல்வராஜ்,வர்த்தகர் அணி இணைச் செயலாளர் நா.முருகவேல், தொழிலாளர் அணி துணைச் செயலாளர் எல்.பி.எஃப். தமிழ்ச் செல்வன்,கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளர் மீனா ஜெயகுமார்,

பொதுக்குழு உறுப்பினர்கள் வெ.ந.உதயகுமார், முமாச முருகன், வழக்கறிஞர் மகுடபதி,இரா.மணிகண்டன்,ச.குப்புசாமி,ச. கார்த்திகேயன், சரஸ்வதி புஷ்பராஜ்,

பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ்.எம்.சாமி,மு. சிவா, ஷேக் அப்துல்லா, துரை.செந்தமிழ்ச்செல்வன், மா.நாகராஜ், இரா. சேரலாதன், வ.ம.சண்முகசுந்தரம், பரணி கே.பாக்கியராஜ், எ.எம்.கிருஷ்ணராஜு, கே.எம்.ரவி, கோவை லோகு, அஞ்சுகம் பழனியப்பன், ஆர்.எம். சேதுராமன், ப.பசுபதி, மார்க்கெட் எம். மனோகரன், வி.ஐ.பதுருதீன்,

அணிகளின் அமைப்பாளர்கள் இளைஞரணி தனபால், சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு இலா. தேவசீலன், நெசவாளர் அணி வி.மணி, தொழிலாளர் அணி கே.ஆர்.ராஜா, மீனவர் அணி கண்ணன்,அயலக அணி தி.கண்ணன், சுற்றுச்சூழல் அணி சத்யா கோவை தங்கம், தொண்டர்அணி அர்ஜுனன், மாணவர் அணி சிவப்பிரகாஷ், பொறியாளர் அணி நா.பாபு, ஆதிதிராவிடர் நலக் குழு டெம்போசிவா, வர்த்தகர் அணி தலைவர் தென்னவன் சுப்பிரமணியம், விளையாட்டு மேம்பாட்டு அணி சஞ்சய்,வட்டக் கழகச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.




கோவை மாநகர் மாவட்டக் கழகக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் சிறப்பாகக் கொண்டாடுவது குறித்து மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார்.

# சேலம் கிழக்கில் சதுரங்கப் போட்டி துவக்க விழா!

சேலம், நவ. 23 -

சேலம் கிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாநில அளவிலான இளையோர் சதுரங்கப் போட்டி டிசம்பர் 22ஆம் தேதி நடைபெறுவதையொட்டி வலைதள தொடக்க விழா நிகழ்ச்சி வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் ப்ரண்ட்ஸ் ரமேஷ் தலைமையில் வலைதள பக்கத்தை கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கருணாநிதி, சுரேஷ்குமார், சின்ன துரை, ஏ.ஏ.ஆறுமுகம், முனைவர் அ.சீனிவாசன், முத்துலிங்கம், தமிழ்செல்வன், சோமசுந்தரம், சங்கர், கோபால், வரத. ராஜசேகர், தனசேகரன், ராஜவேல், வெண்ணிலா சேகர், மாணிக்கம், உமா சங்கர், விஜயகுமார், ரத்தினவேல், ராஜேந்திரன், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், மூர்த்தி, சிவராமன், மருதமுத்து, டாக்டர் செழியன், மணி, அழகுவேல், சித்தார்த்தன், பாலமுருகன், பாலசுப்பிரமணியன், வேல்முருகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். விழா ஏற்பாட்டை லட்சுமண பெருமாள், முனைவர் தங்கபாண்டியன், ஏற்காடு ரமேஷ் பாபு, செல்வகுமார், ஆவின் செல்வமணி, கிருஷ்ண வேணி செய்தனர்.



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் 20.11.2024 அன்று ஈரோடு மாவட்ட பவானியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசினர் மாணவியர் விடுதியில் நேரில் சென்று ஆய்வு செய்து, மாணவிகளுடன் கலந்துரையாடி, அவர்களின் அடிப்படை வசதிகளை குறித்து கேட்டறிந்தார். இந்நிகழ்வில் மாவட்ட உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க மூன்று நாள் சுற்றுப்பயணமாக திருச்சி, நாகப்பட்டினம், கடலூர் மாவட்டங்களுக்கு செல்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

### 23/11/2024 சனிக்கிழமை

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| மாலை 05:30 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் நூலகம் திறப்பு விழா. | ரத்னா காம்ப்ளக்ஸ், ஆஸ்பத்திரி சாலை, துறையூர். |
| மாலை 05:45 மணி | பெரம்பலூர் மக்களவை உறுப்பினர் அலுவலகம் திறப்பு விழா. | திருச்சி சாலை, துறையூர். |
| மாலை 06:00 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் சிலை திறப்பு விழா. | பேருந்து நிலையம், துறையூர். |

### 24/11/2024 ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10:00 மணி | மீனவர் அணி துணைச் செயலாளர் அக்கரைப்பேட்டை மனோகரன் இல்லத் திருமண விழா. | வி.பி.என்.திருமண மண்டபம், நாகப்பட்டினம் |
| காலை 11:00 மணி | மாவட்டக் கழகம் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா. | கலைஞர் அரங்கம், அவுரித் திடல், நாகப்பட்டினம். |
| மதியம் 12:00 மணி | கழக சார்பு அணி நிர்வாகிகளுடனான சந்திப்பு. | ஏ.எஸ்.ஏ.திருமண மஹால், நாகப்பட்டினம். |
| மாலை 03:00 மணி | சீர்காழி ஒன்றிய பெருந்தலைவர் அவர்களின் இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சி. | சிக்னேச்சர் திருமண மண்டபம், மயிலாடுதுறை. |

### 25/11/2024 திங்கள்கிழமை

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10:00 மணி | 'கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்' வழங்குதல். | புனித வளனார் மேல்நிலைப்பள்ளி, கம்மியம்பேட்டை, கடலூர். |
| காலை 11:15 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் நூலகம் திறப்பு விழா. | சங்கரன் சாலை, துறைமுகம், கடலூர். |
| காலை 11:45 மணி | கழக சார்பு அணி நிர்வாகிகளுடனான சந்திப்பு. | எம்.எம்.எம்.திருமண மண்டபம், துறைமுகம், கடலூர். |
| மதியம் 01:00 மணி | மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர மோட்டார் வாகனம் வழங்குதல். | சி.கே.பள்ளி வளாகம், கடற்கரைச் சாலை, அண்ணா நகர், கடலூர். |
| மாலை 04:30 மணி | அரசு ஆய்வுக் கூட்டம் | ஆட்சியர் அலுவலகம், கடலூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 21-11-2024

